பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 31 செவ்வாய்க்கிழமை 13.04.2021 கதிர் 159

**இனி இது ரகசியம் அல்ல!**

அரசுக் கூட்டுக்குள் குழப்பம். அதுதான் தென்னிலங்கை அரசியலில் இப்போது பரபரப்புச் செய்தியாகப் பேசப்படும் விடயம்.

பொதுஜன பெரமுன கூட்டுக்குள் சிறிய பங்காளிக் கட்சிகள் எல்லாம் கெம்பிக் கொண்டு நிற்கின்றன.

பக்கம்02 »

# இராணுவத் தளபதிக்கு எதிராக போர்க் குற்ற ஆவணம் தாக்கல்



## பிரிட்டனிடம் 50 பக்கக் கோவையைச் சமர்ப்பித்தது சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம்



லண்டன், ஏப்ரல் 13

போர்க்குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா குறித்த ஐம்பது பக்க ஆவணக் கோவையைத் தொகுத்து அதனை பிரிட்டனின் வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் தடைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பித்துள்ளது சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம்.

☞ 2

## எமது வாயை அடைக்க முயற்சிக்க வேண்டாம்!



### அரசுக்கு பேராயர் எச்சரிக்கை

எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் – குற்றவாளிகள் கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கைக்காக, ஒரு சிலரின் பெயர்களைப் பிரதான குற்றவாளிகள் என்று அரசு அறிவிக்கக் கூடாது.

– இவ்வாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று நௌபர் மௌலவியின் பெயரை அரசு அறிவித்துள்ளமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே பேராயர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்

☞ 2

## யாழ்ப்பாணத்தில் மேலும் எண்மருக்குக் கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 8 பேருக்கும், முல்லைத்தீவில் ஒருவருக்கும் என வடக்கு மாகாணத்தில் 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 406 பேரின் மாதிரிகள் நேற்றுபி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 9 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில்

☞ 2

## புதுவருடத் தினத்திலேயே ரமழான் நோன்பும் ஆரம்பம்

இந்தத் தடவை தமிழ் – சிங்களப் புத்தாண்டு தினத்திலேயே முஸ்லிம்களின் ரமழான் நோன்பும் ஆரம்பமாகின்றது.

தலைபிறை தென்படாத காரணத்தினால் புனித ரமழான் நோன்பு நாளை 14 ஆம் திகதி ஆரம்பமாகும் என நேற்று அறிவிக்கப்பட்டது.

புனித ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் முறைப்படி மாதத்திற்கான தலைப்பிறை நாட்டின் எந்தப் பகுதியிலும் தென்படாததால் ஷஃபான் மாதத்தை 30 ஆகப் பூர்த்தி செய்து ரமழான் மாதத்தை நாளை புதன் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து

☞ 2

## இம்மாத இறுதியில் டில்லி பறக்கின்றார் கோட்டாபய

### மோடியுடன் முக்கிய பேச்சு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த மாத இறுதியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் எனவும், அவர் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என்று இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

(விரிவான செய்தி 7ஆம் பக்கத்தில்)

## ஐஸ் ரக போதைப்பொருள் 100 கிலோவுடன் ஐவர் கைது

சபுகஸ்கந்த ரத்கஹவத்தை பிரதேசத்தில் 100 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப் பொருளுடன் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

99 பக்கெட்டுக்களில் பொதி செய்யப்பட்ட நிலையில் இந்த ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜா – எல, நிவந்தம பிரதேசத்தில் 13 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப்பொருளுடன் இரண்டு பெண்கள் உட்பட 6

☞ 2

## 'கூட்டாட்சி' என்ற பேச்சுக்கு இந்த ஆட்சியில் இடமில்லை

### அது கிடைக்கும் என்று விக்கி கனவு காணக்கூடாது என்கிறார் வீரசேகர



புதிய அரசமைப்பிலும் ஒற்றையாட்சியே பேணப்படும். ஒற்றையாட்சியால் நாடு எந்தப் பேரழிவையும் சந்திக்கவில்லை. சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்க நிபுணர் குழுவிடம் தமிழ் மக்கள்

☞ 2



## அழிவுப் பாதையில் இலங்கை அரசு

### தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சுட்டிக்காட்டு

இலங்கை அரசின் போக்குகள் சர்வதேச நாடுகளின் உறவு நிலையில் இருந்து விலக்கிவைக்கும் நிலையை நோக்கி நகர்ந்து செல்கின்றது. இதனை உணராமல் இந்த அரசு செயற்படுகின்றது.

– இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அரசின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமாளிப்பு முயற்சியாக வரும் திங்கட்கிழமை – புதுவருடக் கொண்டாட்டங்கள், ஆரவாரங்கள் அடங்கிய பிறகு – பங்காளிக் கட்சித் தலைவர்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து சமரச முயற்சிகளை முன்னெடுக்க இருக்கின்றார்.

ஆனால், அதற்கு இடையில் சமரச – சமாளிப்பு – நடவடிக்கையை ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தந்திரமாகத் தாமே ஆரம்பித்து விட்டார் என்கின்றன கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள்.

அது என்ன நடவடிக்கை என்ன என்று கேட்கின்றீர்களா?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்குப் பிரச்சினை – கருத்து வேறுபாடு – முரண்பாடு – இல்லை.

அரசுக்குள் பதவி எதனையும் வகிக்காது, தோன்றாய்த் துணைபோல, அமானுஷ்யமாக செயற்படு பஸில் ராஜபக்ஷவின் அரூபமான அதிகாரக் கரங்கள் தொடர்பிலேயே விமல் வீரவன்ஸ உட்பட பங்காளிக் கட்சித் தலைவர்கள் சீற்றமாக உள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபயவின், ஜனாதிபதி செயலணிக் குழுவின் தலைவர் பஸில் ராஜபக்ஷதான். ஜனாதிபதி கோட்டாய எடுக்கும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தன்னுடையதே என்று காட்டிக் கொண்டு, ஜனாதிபதிக்கு அடுத்து அரசுக்குள் ஏக சக்தியாய் கோலோச்சுபவர் பஸில்தான். ஜனாதிபதியின் செயலாளர் வரையும் பஸிலின் செல்வாக்கும், அதிகாரமும் கொடிகட்டிப் பறக்கின்றன. அரசுக்குள் அவர் வைத்ததுதான் சட்டம் என்ற நிலைமை.

ஒருபுறம் அரசுச் செயற்பாடுகளில் அதிகம் தலை வைக்காமல் ஒதுங்கிப் போகும் பிரதமர். மறுபுறம் தீர்மானங்களை எடுத்து விட்டு, அவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பை பஸிலிடம் விட்டு விடும் ஜனாதிபதி.

இவை காணாதா பஸிலின் செல்வாக்கு அதிகாரம் மேலெழுந்து பறக்க...?

அது மாத்திரமல்ல, கோட்டாயவைத் தொடர்ந்து ஆளும் தரப்பில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக பஸில் ராஜபக்ஷவே களமிறக்கப்படுவார் என்ற பேச்சு வேறு.

பஸில் ராஜபக்ஷவுடன் முரண்டுபிடித்து, குழம்பி நிற்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை இந்த விடயங்கள்தாம் சீற்றத்துக்குள்ளாகியிருக்கின்றன என்பது தெரிந்த விவகாரம்தான்.

இந்தக் குழப்பத்துக்கு தமது அதிரடி நடவடிக்கை ஒன்றின் மூலம் 'செக்' வைத்து, பங்காளிக்கட்சித் தலைவர்களுக்கும் ஐஸ் வைத்துக் குளிர்வித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபாய.

இது வரை காலமும் ஜனாதிபதி செயலணியின் தலைவராக பஸில் மாத்திரமே இருந்தார். ஜனாதிபதி மாதம் தோறும் நாட்டில் கிராமம் ஒன்றுக்கு சென்று நடத்தும் 'கிராமத்துடன் உரையாடல்' திட்டம், ஜனாதிபதியின் நடவடிக்கைகளில் மிக முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. அங்கு ஜனாதிபதி எடுத்து அறிவிக்கும் திட்டங்கள், நடவடிக்கைகளை, தொடர்ந்து பின்னூட்டல் செய்து, மேற்கொண்டு விடயங்களை கவனிக்கும் பொறுப்பும் ஜனாதிபதி செயலணியின் தலைவர் என்ற முறையில் பஸில் ராஜபக்ஷவிடம் இருந்தது.

இப்போது அந்தப் பொறுப்பை பஸிலிடம் இருந்து ஜனாதிபதி பிடுங்கி விட்டார். ஜனாதிபதி செயலணி ஒன்றுக்கு பஸில் தலைவராக இருப்பது போல, கிராமத்துடன் உரையாடும்' தனது செயற்றிட்டங்களின் முடிவுகளை மேற்கொண்டு முன்னெடுக்கும் செயலணியின் தலைவராக தனது பெறாமகன் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை நிய மித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அது மட்டுமல்ல, தனது மருமக்கள், பெறாமக்கள் என ராஜபக்ஷக்களின் அடுத்த சந்ததியைச் சேர்ந்த குஞ்சான் குருமான்களையும் அந்தச் செயலணியில் நாமலின் கீழ் அங்கத்தவர்களாக அவர் நியமித்திருக்கின்றார்.

இந்த நியமனம், ராஜபக்ஷ குடும்பத்தின் அதிரடித் தீர்மானம் – முடிவு – திருப்பம் – என்கின்றன கொழும்பில் உள்வீட்டு வட்டாரங்கள்.

வெறுமனே பஸில் ராஜபக்ஷவுக்கு சமதையான ஒரு செயலணித் தலைவர் நியமனம் மட்டுமல்ல, அதையும் தாண்டி ராஜபக்ஷ குழாமின் அடுத்த தலைமுறை இளவரசருக்கான அடையாளப்படுத்தல் இது என்று வியாக்கியானப்படுத்துகின்றன அந்த வட்டாரங்கள்.

அது மட்டுமல்ல, அதையும் தாண்டி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் பஸில் ராஜபக்ஷ என்று இப்போதே உங்கள் பாட்டில் முடிவு செய்து விடாதீர்கள், பாதை திறந்தே இருக்கின்றது, நாமலும் நிறுத்தப்படலாம், அதனால் அவசரப்படாதீர்கள் – என்ற செய்தியையும் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு இந்த நியமனம் சொல்லாமல் சொல்லியிருக்கின்றது என்கின்றன அந்த வட்டாரங்கள்.

பெரமுனவுக்குள் வெடிப்பை ஆவலோடு எதிர்பார்த்திருந்த நமக்கு, அதைச் சமாளிக்கும் இத்தகைய 'மூவ்'கள் 'அன்ரி கிளைமாக்ஸ்' ஆகத்தான் தெரியும். என்ன செய்வது? பார்த்திருப்போம். பொறுத்திருப்போம்.

– மின்னல் –

## யாழ்ப்பாணத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

4 பேருக்கும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் 7 பேரும் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்.

சாவகச்சேரி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

## ஐஸ் ரக போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேர் நேற்று முன்தினம் தினம் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஹெரோயின் தொடர்பில் சுற்றிவளைப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து ஐஸ் போன்ற போதைப்பொருள்களை நாட்டிற்குத் கொண்டு வருவது அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## எமது வாயை அடைக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:–

ஈஸ்டர் தாக்குதல் இலங்கைக்கு மட்டுமல்ல சர்வதேசத்துக்கும் சவால் விடுப்பதாக அமைந்திருந்தது. கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதிகளில் தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜைகள்கூட ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்திருந்தனர். இது அனைவருக்கும் தெரிந்த விடயம். இந்த நிலையில் குற்றவாளிகளைத் தண்டிக்காவிட்டால் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவோம் என்று அரசின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தேன். அரசுக்கு கால அவகாசத்தையும் வழங்கியிருக்கின்றேன்.

இதையடுத்து ஒரு சிலரின் பெயர்களை பிரதான குற்றவாளிகள் என்று அரசு அறியப்படுத்தியுள்ளது. இது எமது வாயை அடைக்கும் முயற்சியாக இருக்கக் கூடாது. ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய உண்மையான, நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடைய குற்றவாளிகள் அனைவருக்கும் எதிராக தகுதி தராதரம் பாராது உடன் சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவரையும் அரசு தப்ப விடக் கூடாது.

அரசும் எதிரணியும், இந்தத் தாக்குதலை தத்தமது அரசியல் பரப்புரைகளுக்கும் எதிர்வரும் தேர்தல் பரப்புரைக்கும் தற்போது பயன்படுத்துவதை உடன் நிறுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க அரசும், எதிரணியும் ஓரணியில் செயற்படவேண்டும் – என்றார்.

## அழிவுப்பாதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மனங்களை உதறித் தள்ளுகின்ற செயற்பாடுகளைச் செய்து வருகின்றது. இது இலங்கைக்கு நல்லதல்ல. இது தொடர்பில் பல வல்லுநர்கள் உள்ளூர், வெளியூர் மனித உரிமை அமைப்புக்கள் இலங்கையின் செயற்பாட்டுக்குக் கண்டனங்களைத் தெரித்து வருகின்றார்கள்.

ஏற்கனவே கொரோனா வைரஸ் தாக்கத்தால் பொருளாதார இழப்புகள் அதிகரிக்கும் நிலையில் பல தொழில் நிறுவனங்கள் மூடப்படும் சந்தர்ப்பங்கள், வேலைவாய்ப்பு இல்லாமல் போகும் நிலைகள் என பல இழப்புக்களைச் சந்தித்து வரும் சூழலில் சரியான திட்டமிடல் இல்லாத நிலையில் அழிவுப் பாதையை நோக்கி இந்த அரசு செல்கின்றது.

இந்த அரசு நாட்டு மக்கள் எத்தகைய நிலையில் இருக்கிறார்கள் என்பதை அறியாது செயற்படுகின்றது. இத்தகைய போக்கு சர்வதேச நாடுகள், வெளிநாட்டு சத்திகளிடம் இருந்து ஒதுக்கப்படுகின்ற –அந்நியப்படுகின்ற நிலைதான் காணப்படுகின்றது.

இத்த அரசு இலங்கையில் காணப்படுகின்ற இனப்பிரச்சினை தீர்வுக்கோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவோ, காணிகள் விடுவிப்பு தொடர்பாகவோ, போரால் பாதிக்கப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்கோ திட்டங்களை வகுக்க முடியாதவர்களாக – பொருளாதார ரீதியான முன்னேற்றங்களைக்கூடச் செய்ய முடியாதவர்களாக இந்த ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள்.

இது ஜனநாயகமற்ற நாடாக மாறுகின்ற நிலை காணப்படுகின்றது. அது மட்டுமன்றி சர்வதாதிகாரப் போக்கில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் நிலையைக் கொண்டுவருகின்றது. ஆட்சிப்பீடம் ஏறியது முதல்கொண்டு நிர்வாகத்துக்குள் இராணுவ அதிகாரிகளை நியமித்து வருகின்றார்கள்.

இது தமிழ்மக்களுக்கு மட்டுமன்றி ஜனநாயகத்தை விரும்புகின்ற மக்களுக்கும் பாதிப்புகளை – ஆபத்துகளை ஏற்படுத்தும்.

அரசின் தற்போதைய நிலமைகளை எமது மக்கள் அவதானத்துடன் பார்க்க வேண்டும். எது நடந்தாலும் எமது மக்களை இலக்கு வைக்கின்ற செயற்பாடுகளை அரசு செய்து வருகின்றது.

நாங்கள் இந்த அரசின் செயற்பாடுகளைக் கண்டிக்கின்றோம். அதுமட்டுமன்றி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட நாடுகளும் நடுநிலை வகித்த நாடுகளும் இந்த அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்த வேளையில் கேட்டுக்கொள்கின்றோம் – என்றார்.

## புதுவருடத் தினத்திலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

நேற்று மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கூடிய பிறைக்குழு இந்தத் தீர்தானத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

## இராணுவத் தளபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

06 ஜுலை 2020 இல் உருவாக்கப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய மனித உரிமைகள் தடை பொறிமுறையின் கீழ் இலங்கையின் தற்போதைய இராணு வத் தளபதியாக இருக்கும் சவேந்திர சில்வா ஏன் தண்டக்கப்பட வேண்டும் என இந்த ஆவணம் வாதிடுகின்றது எனக் கூறப்படுகின்றது.

"எங்களிடம் இலங்கையின் போரின் இறுதிக்கட்டம் பற்றி கவனமானமுறையில் சர்வதேச வழக்கறிஞர்கள் மற்றும் சட்டவாளர்கள் மூலம் சேகரித்த ஆதாரங்களைக் கொண்ட விரிவான களஞ்சியம் ஒன்று உள்ளது. இங்கிலாந்தில் தற்போதுள்ள பல பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலம் இந்த சமர்ப்பிப்பை உருவாக்குவதற்கும் சவேந்திர சில்வா மற்றும் அவரது கட்டளைக்கு கீழ் இருந்தவர்களுடனும் இணைப்புகளை உருவாக்குவதற்கும் மிகவும் முக்கியமானதாக இருந்தது" என சர்வதேச உண்மை மற்றும் நீதிககான செயற்திட்ட அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கில் 2009 இல் இடம்பெற்றசிவில்போரின் இறுதிக்கட்டத்தின் போது 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்தபோது சவேந்திர சில்வா வாழ்வுரிமை உட்பட பாரிய மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதில் அவரது பங்கு குறித்து சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் இந்தச் சமர்ப்பிப்பு விவரித்துக் கூறுகின்றது.

அது பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்பட்ட இடங்களில் இருந்த வைத்தியசாலைகள் மற்றும் உணவுக்காக வரிசையில் நின்றவர்கள் மீது அரசால் மேற்கொள்ளப்பட்ட எறிகணை மற்றும் குண்டுத் தாக்குதலில் உயிர்தப்பிய தமிழர்களின் கொடுமை நிறைந்த – நேரில்கண்ட – சாட்சிய வாக்கு மூலத்திலிருந்து இந்தச் சமர்ப்பிப்பு உருவாகின்றது.

இவர்களில் பலர் தற்போது பிரிட்டனில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். பிரிட்டன் அரசின் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய பகுதியாக உள்ள பாலியல் வன்புணர்வு உட்பட பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதையில் சில்வாவின் தொடர்பை இந்த சமர்ப்பிப்பு கவனமாக ஆராய்கின்றது.

"2020 இல் அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் போரின் முடிவில் இடம் பெற்ற மீறல்கள் குறித்துக் கூறப்பட்ட அவரது வகிபாகத்திற்காக அவரைக் கடுமையாக கண்டனம் செய்தது. ஆனால், பிரிட்டனின் தடைப்பொறிமுறையின் அதிகார வரம்பு வேலைகள் விரிவானவையாக இருப்பதுடன் இராணுவத் தாக்குதலின் போது வைத்தியசாலைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட ஏனைய பொதுமக்களின் இடங்கள் மீதான எறிகணைத் தாக்குதலில் அவரது பங்கை உள்ளடக்குகின்றது.

"மீறல்களை முழுமையாக அங்கீகரித்தல் மற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ஆதரவு கொடுத்தல் என்பன முக்கியமானது" என்று சூக்கா கருத்து தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல் தொடர்பில் இன்னுமொரு முக்கிய முன்னோக்கிய படியாக பிரிட்டனின் கண்டனம் இருக்கும். அத்துடன் அண்மையில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவானதாக இருக்கும். இதற்காக பிரிட்டனே முக்கிய பங்குவகித்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்குப் பிரிட்டனின் புதிய தடை பொறிமுறையைப் பிரயோகிப்பது தொடர்பான அரசியல் விருப்பம் அண்மைய நாடாளுமன்ற விவாதத்தின்போது வெளிப்படையாகத் தெரிந்தது.

இந்த விவாதத்தில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சவேந்திர சில்வா உட்பட இலங்கையின் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகப் பிரிட்டன் அரசு ஏன் தடைகளை விதிக்கவில்லை எனக் கேட்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் சவேந்திர சில்வாவின் பெயர் ஆறு தடவைகள் குறிப்பிடப்பட்டது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 'கூட்டாட்சி' என்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசியக் கூட்டணியின் யோசனைகளை அந்தக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சி.வீ.விக்னேஸ்வரன் அண்மையில் சமர்ப்பித்திருந்தார். அதில் ஒற்றையாட்சியால் தான் நாடு பேரழிவைச் சந்தித்தது என்றும், புதிய அரசமைப்பில் சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமை உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இந்த ஆட்சியில் இடமில்லை.

இந்த முறைமைகள் புதிய அரசமைப்பில் இருக்க வேண்டும் என்று விக்னேஸ்வரன் அணியினர் கனவு காணக்கூடாது.

நடைமுறையில் இருக்கும் ஒற்றையாட்சி முறைமை மூலம்தான் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

புதிய அரசமைப்பில் இது தொடர்பில் தெளிவாகப் குறிப்பிடப்படும்.

ஒற்றையாட்சி முறைமையால் இந்த நாடு பேரழிவுகளைச் சந்திக்கவில்லை. பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாட்டை மீட்டெடுத்தோம். தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழீழக் கனவைத் தவிடுபொடியாக்கினோம். அவர்களை இல்லாதொழித்தோம்.

சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமைதான் பிரிவினைக்கு வழிவகுக்கும். அது நாட்டைப் பிளவுபடுத்தும்; நாட்டின் நல்லிணக் கத்துக்குப் பாதகமாக அமையும் – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியடையும் எண்ணம் இருந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

அரசாங்கத்துக்குத் தோல்வியடையும் எண்ணம் இருந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு எச்சரிக்கை விடுப்பதாக முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு – நாராஹென்பிட்டி அபயராம விகாரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துரைக்கையில்–

இடி விழுந்தது போல் திடீரென இந்த தேங்காய் எண்ணெய்ப் பிரச்சினை உருவாகியது. பொருள்களின் விலைகள் ரொக்கெட் போல் உயர்ந்து வருகின்றன.

அமைச்சர்கள் எதனைக் கூறினாலும் பொருள்களைக் கொள்வனவு செய்ய கடைகளுக்கே செல்ல வேண்டும்.

கடைகளுக்குச் சென்றால், அமைச்சர்கள் கூறும் விலையில் பொருள்கள் இல்லை. அங்கு விலைகளில் மாற்றம் காணப்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை போக்கவே நாங்கள் புதிய அரசாங்கத்தைத் தெரிவுசெய்தோம்.

அரசாங்கத்தின் குறைகளை நாங்கள் சுட்டிக்காட்டும் போது, எம்மில் சிலர் துதிபாடிக் கொண்டிருக்கின்றனர்.

பிக்குமார் துதிப்பாடினால், அரசாங்கம் தவறான



வழிக்குச் செல்லும். தற்போது ஊழல், மோசடிகள் அதிகரித்து வருகின்றன.

அமைச்சர்கள் உதய கம்மன்பில், விமல் வீரவன்ஸ மற்றும் அபயராம விகாரை உள்ளிட்ட அணிகள் இல்லை என்றால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உருவாகி இருக்காது. நாங்கள் ஒன்றரை ஆண்டுகளாகக் காத்திருந்தோம்.

முடிந்தால், மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்தினால், அரசாங்கம் எந்த இடத்தில் இருக்கும் என்பது தெளிவாகும். யார் என்ன கூறினாலும் புத்தாண்டுக்குப் பின்னர் நாங்கள் அணிதிரள்வோம்.

மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டாம். அரசாங்கத்திற்கு தோல்வியடையும் எண்ணம் இருந்தால், மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள் எனவும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை விடுமுறையில் அதிரடி மாற்றங்கள் வரும்

## ஆலோசிக்கின்றது கல்வி அமைச்சு

ஏப்ரல் 19 ஆம் திகதியன்று பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதும் எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாத பாடசாலை விடுமுறைக் காலங்களில் மாற்றங்கள் ஏற்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவிக்கிறது.

இந்த வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த க.பொ.த. உயர் தரப் பரீட்சை மற்றும் 5 ஆம் தரத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சை என்பன எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஓகஸ்ட் மாத பாடசாலை விடுமுறையை ஒக்ரோபர் மாதத்தில் வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு வருகிறது.

மேலும், க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சை அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் நடத்த உத்தேசித்துள்ளதால், டிசெம்பர் மாதத்துக்கான விடுமுறையை ஜனவரி மாதம் வழங்குவது தொடர்பாகக் கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

ஆகவே, ஓகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதங்களில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு க.பொ.த. உயர் தரம், 5 ஆம் தரப் புலமைப் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் நடத்தப்படும் காலங்களில் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கு கல்வி அமைச்சின் உயர்மட்ட குழு கலந்தாலோசித்து வருகிறது.

5 ஆம் தர புலமைப் பரீட்சை ஒக்ரோபர் 3 ஆம் திகதியன்றும், க.பொ.த உயர் தரப்பரீட்சை ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலும், க.பொ.த. சாதாரண தர பரீட்சை அடுத்தாண்டு ஜனவரி மாத கடைசி வாரத்தில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொறுப்பற்ற விதமாக மக்களின் செயற்பாடு

## பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் வேதனை

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் இன்னும் குறைவடையாத நிலையில் மக்கள் பொறுப்பற்ற விதமாக செயற்படுகின்றனர் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

பெரும்பாலான மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் செயற்படுகின்றமையால், புது வருட புத்தாண்டுக்குப் பின்னர் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கத்துக்கு உள்ளாக கூடிய நிலைமைக்கு தள்ளப்படுவர்.

மேலும், பண்டிகைக் காலத்தில் வேறு பகுதிகளுக்கு செல்லும் மக்களுக்கு எழுமாறாக பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பரிசோதனை செய்யும் இடங்கள் தொடர்பாக வெளிப்படுத்தாமல் இருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசியை செலுத்துவது தொடர்பாக உறுதியான தீர்மானம் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. – என அச்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

# ரஞ்சனுக்காக நாடாளுமன்ற பதவியைத் துறக்கிறார் ஹரின்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தொடர்பாக மே மாத முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிடவுள்ளதாக ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பேரணியில் பேசிய அவர் –



நான் ரஞ்சன் ராமநாயக்க சார்பாக ஓர் அரசியல் முடிவை எடுத்து வருகிறேன். மே முதல் வாரத்தில், நான் அரசாங்கத்துக்கு ஒரு சவாலை முன்வைப்பேன். – எனக் கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பு மூலம் தனது நாடாளுமன்ற ஆசனத்தை ஹரின் பெர்னாண்டோ தியாகம் செய்வார் என வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு மன்னிப்பு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ அரசாங்கத்திடம் கோரிக்கை வைப்பார்.

இதனை அடுத்து அவரை நாடாளுமன்றத்துக்கு அனுமதிக்கும் வகையில் தனது உறுப்புரிமையை ஹரின் பெர்னாண்டோ இராஜினாமா செய்வார் என அறிய முடிகின்றது.

# கிருலப்பனை ஸ்ரீஎலன் மெத்தினியாராம அன்னதானத்தில் ஜனாதிபதி பங்கேற்பு





கிருலப்பனை ஸ்ரீஎலன் மெத்தினியாராமவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அன்னதானசாலை, ஆசிரமம் மற்றும் தியானப் பூங்கா திறப்புவிழாவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் விகாரையில் இடம்பெற்ற அன்னதான நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி மற்றும் பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்பு விசேட செயலணியின் தலைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகருமான பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் சமயக் கிரியைகளில் கலந்துகொண்ட பின்னர் அன்னதான நிகழ்வில் கலந்துகொண்டு மகாசங்கத்தினருக்கு அன்னதானம் வழங்கினார்.

சங்கைக்குரிய உடுவே தம்மாலோக்க தேரரின் பிறந்த நாள் மற்றும் இன்று இடம்பெறும் தேரரின் தாயாரின் பிறந்த நாளுக்கு ஆசீர்வாதம் அளிப்பதும் இந்த அன்னதான நிகழ்வின் மற்றுமொரு நோக்கமாகும்.

மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர்களான சங்கைக்குரிய திம்புல்கும்புரே விமலதம்ம தேரர், கலாநிதி சங்கைக்குரிய நியங்கொட விஜித்தசிறி தேரர், அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் சங்கைக்குரிய வெண்டருவே உபாலி தேரர், அமரபுர மகாநிக்காயவின் அனுநாயக்க தேரர், கிருலப்பனை எலன் மெத்தினியாராம விகாராதிபதி சங்கைக்குரிய யோகியானே சோபித்த தேரர் ஆகியோரின் தலைமையில் அன்னதான நிகழ்வு இடம்பெற்றது.

மல்வத்தைப் பீடத்தின் அனுநாயக்க தேரர் சங்கைக்குரிய திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் இதன் போது ஜனாதிபதிக்கு நினைவு சின்னம் ஒன்றை வழங்கினார்.

அமைச்சர் சரத் வீரசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பெர்னாண்டோ, பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பசறையில் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு கடமைநேரத்தில் நேற்று கத்திக் குத்து

நகர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மீது கத்திக் குத்து தாக்குதல் சம்பவம் ஒன்று பசறை நகரில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றுள்ளது.

பசறை பஸ் நிலையத்தில் கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளை அங்காடி வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபர், தன்னிடமிருந்த கத்தியை எடுத்து, பொலிஸ் கான்ஸ்டபிள்ளை தாக்கியுள்ளார்.

இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் கான்ஸ்டபிள் உடனடியாக, பசறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட அங்காடி வியாபாரி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பசறையில் பொது மக்களுக்கும், பஸ் பயணிகளுக்கும் இடையூறுகளை, மேற்படி வியாபாரி மேற்கொண்டிருந்ததினால், குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள், அந்த வியாபாரியை எச்சரித்தார்.

இதையடுத்து, ஆத்திரம் கொண்ட அங்காடி வியாபாரி, பொலிஸ் கான்ஸ்டபிள்ளை கத்தியால் தாக்கியுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உண்மையை அடக்க முயலாதீர்!

இணையத் தளங்கள் மற்றும் சமூக வலைத் தளங்களின் ஊடான போலிப் பிரசாரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டத்தைக் கொண்டு வர அரசு தயாராகி வருகின்றது.

சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பொறுப்பின்றி மிக மோசமாக முன்னெடுக்கப்படும் பிரசாரங்களை நோக்கும் போது இத்தகைய சட்டங்களை உருவாக்குவது தவிர்க்க முடியாததுதான்.

ஆனால், அந்தச் சட்டத்தை யார், எந்த வகையில், எப்படிப் பிரயோகிப்பர், அது எப்படிக் கையாளப்படும் என்பதில்தான் விடயம் தங்கியுள்ளது.

இதற்கான சட்டக்கோவையை நீதி அமைச்சும் வெகுஜன ஊடக அமைச்சும் இணைந்து அறிமுகப்படுத்த இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

இணையத் தளங்கள், சமூக வலைத் தளங்களைக் கட்டுப்படுத்துவது அல்லது ஒழுங்குபடுத்தி, ஒருசீருக்குள் கொண்டு வருவது மிகக் கவனத்துடனும், அவதானத்துடனும், நுட்பத்துடனும் முன்னெடுக்கப்பட வேண்டிய பணி.

பெரும் மக்கள் செல்வாக்கோடு – அதிகப்படியான ஆதரவுடன் – அதிகாரத்துக்கு இந்த ஜனாதிபதியும் அவரது அரசினரும் வந்துள்ளனர். அந்த மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய முடியாமல் ஆளும் தரப்பு தடுமாறித் தவறிழைத்து வருவதால் அரசுத் தரப்பினரும் ஜனாதிபதியும் மக்கள் செல்வாக் கைக்கணிசமாக இழந்து வருகின்றனர்.

அது தொடர்பான உண்மை நிலையை அம்பலப்படுத்தி, கள நிலைவரங்களை மக்களுக்கு உணர்த்துவதில் இணையத் தளங்களும், சமூக ஊடகங்களும் காத்திரமாகப் பங்களித்து வருவதும் உண்மையே.

இத்தகைய மக்கள் எழுச்சியால் கிளர்ந்த சீற்றம் காரணமாக இத்தகைய சட்டங்களைக் கொண்டு வர அரசு முயல்கின்றதோ என சந்தேகம் எழாமல் இல்லை.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான நோக்கத்தை ஒட்டி வெளியிடப்பட்ட தகவல்கள் அத்தகைய சந்தேகத்தை எழுப்புகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

சமூகங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்தும் மற்றும் வெறுப்புணர்வுகளைத் தூண்டும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுத்தல், இரு நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கைகள் மற்றும் நட்புறவுச் செயற்பாடுகள் குறித்து பொய்யான பிரசாரங்களைப் பரப்புதல், இனவாத, மதவாத கருத்துக்களைப் பரப்புதல், நிதி விடயங்களில் பொய்யான கருத்துக்களைப் பரப்புதல் உள்ளிட்ட விடயங்களில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

ஈ, காக்கை நுழையாமல் தடுத்து அரசனைப் பாதுகாக்க வாளைக் கொடுத்து குரங்கை நிறுத்திய கதை போன்று இந்த உத்தேசச் சட்டம் மாறி விடக் கூடாது.

பொய், போலிப் பிரசாரங்களைக் கட்டுப்படுத்தல் என்ற பெயரில் சட்டங்களைக் கொண்டு வந்து, மக்களுக்கு உண்மைகள் சென்றடையும் மார்க்கங்களை அவற்றின் மூலம் அடக்கி, வாய் மூடப் பண்ணும், வேலையை அரசு செய்ய எத்தனிக்குமானால் இந்த முயற்சி குளிக்கப் போய் சேறுபூசும் வேலையாகி விடும்.

தங்கள் அரசியல் எதிரிகளின் செயற்பாடுகளை அடக்குவதற்காக எல்லா விடங்களிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும், கொரோனாத் தடுப்பு விதிகளையும் ஏவிவிடும் ஆட்சிப் பீடம் இது.

அதிகாரங்களை எவ்வாறு மோசமாகத் துஷ்பிரயோகம் செய்தனர் என்பதற்கு 2015 வரையான இருண்டயுக ஆட்சி நமக்கு நல்லசான்று. அத்தகைய இருண்ட யுக ஆட்சியிலே, அந்த ஆட்சியின் தூண்களாக விளங்கிய படை அதிகாரிகளின் கைகளில் நாட்டின் சிவில் நிர்வாகம் மெல்ல மெல்ல வீழ்ந்து வரும் நிலைமை.

இந்தச் சூழலில் புதிய சட்டங்கள் மூலம் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை அடக்கும் – குரல் வளையை நசுக்கும் – புதிய, புதிய சட்டங்களைக் கண்மூடித்தனமாகக் கொண்டுவருவது, நாட்டு மக்களின் தலைமீது மண்போடும் வேலையாகிவிடும்.

கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை அறிமுகப்படுத்துவதில் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் எச்சரிக்கையாக இருப்பது சமூகத்தின் கடமை.

போலி, பொய்ப் பிரசாரங்களைக் கட்டுப்படுத்துவது என்பது உண்மையை மௌனிக்கச் செய்யும் நடவடிக்கையாக இருக்கக் கூடாது.

---

### யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 லட்சத்து ஆயிரத்து 454 குடும்பங்களில்

## ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா சமூக நலக் கொடுப்பனவு கிட்டும்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வாழும் 2 லட்சத்து ஆயிரத்து 454 குடும்பங்களில் சமூக நல கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைக்கு ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தமிழ் – சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொவிட் – 19 பாதிப்பிற்கு உள்ளான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக நலக் கொடு வழங்கும் பணி நேற்று திங்கட்கிழமை காலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள் குடும்பம், குறைந்த வருமானத் தைக் கொண்ட குடும்பம், முதியோர் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள், அங்கவீனக் கொடுப்பனவு, சிறுநீரக நோய் காரணமாக கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள் என ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்கள் இக் கொடுப்பனவிற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்றும் இன்றும் இக்கொடுப்பனவின் பெரும் பகுதியை வழங்கவே எதிர்பார்க்கப்பட்டு ஆரம்ப தினமான நேற்று மட்டும் 50 வீதத்திற்கும் அதிகமான குடும்பங்களிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 1,329 குடும்பங்கள் வாழும் நிலையில் 1,019 குடும்பங்களிற்கும் –

வேலணையில் 5,025 குடும்பங்கள் வாழும் நிலையில் 4, 524, குடும்பங்களிற்கும் –

ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் 3,204 குடும்பங்கள் வாழும் நிலையில் 2,985 குடும்பங்களிற்கும் –

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் 3,514 குடும்பங்கள் வாழும்போது 2, 916 குடும் பங்களிற்கும் –

இந்த ஐயாயிரம் ரூபாக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இதேபோன்று யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 16, 083 குடும்பங்கள் வாழும் நிலையில் 10, 584 குடும்பங்களிற்கும் –

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 22, 449 குடும்பங்கள் வாழும் நிலையில் 13, 223 குடும்பங்களிற்கும் –

சண்டிலிப்பாயில் 17, 164 குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் 14, 340 குடும்பங்களிற்கும் –

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 14, 634 குடும்பங்கள் வாழும் நிலையில் 12, 831 குடும்பங்களிற்கும் –

உடுவிலில் 17,293 குடும்பங்கள் வாழும் நிலையில்13 ,676 குடும்பங்களிற்கும் –

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் 14, 677 குடும்பங்கள் வாழும் நிலையில் 11, 814 குடும்பங்களிற்கும் – இக்கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இவ்வாறே கோப்பாய்.22, 941 குடும்பங்கள் வாழும் நிலையில் 19 ,734, குடும்பங்களிற்கும் –

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 22, 942 குடும்பங்கள் வாழும் நிலையில் 17, 064 குடும்பங்களிற்கும் –'

கரவெட்டியில் 15, 066 குடும்பங்கள் வாழும் நிலையில் 9, 607 குடும்பங்களிற்கும் –

பருத்தித்துறையில் 14, 890 குடும்பங்கள் வாழும் நிலையில் 9,263 குடும்பங்களிற்கும் –

மருதங்கேணியில் 5, 419 குடும்பங்கள் வாழும் நிலையில் 4 ,598 குடும்பங்களுக்கும் – இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த அடிப்படையில் மொத்தம் 2 லட்சத்து ஆயிரத்து 454 குடும்பங்களில் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. – என்றார்.

---

## இன்றும் நாளையும் மதுபான சாலை பூட்டு நேற்று அலைமோதிய மக்கள் வெள்ளம்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மதுபான சாலைகள் அனைத்தும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று மதுபான கடைகளில் பலர் கூடியமையைக் காணமுடிந்தது.

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 13 மற்றும் 14 திகதிகளில் மதுபான சாலைகள் மூடப்படும் என காலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

இருப்பினும் சில சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் பிற குறிப்பிட்ட கடைகளை திறக்க அனுமதி வழங்கப்படும் என்றும் காலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த உத்தரவை மீறும் மதுபானக் கடைகளின் உரிமையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## பஸ்ஸின் சில்லில் சிக்குண்டு இளைஞன் பரிதாபமாக பலி!

### ஹட்டனில் நேற்று சோகம்

ஹட்டன் நகர பிரதான வீதியில் பஸ்ஸின் சில்லில் சிக்குண்ட இளைஞன் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் மக்கள் வங்கிக்கருகில் நேற்றுப் பிற்பகல் 02 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

விக்கடனிலிருந்து ஹட்டன் நோக்கி வந்த தனியார் பயணிகள் பஸ்ஸில் மோதுண்டு விழுந்த இளைஞன் பஸ்ஸின் பின் சில்லில் சிக்குண்டு பலியாகியுள்ளார்.

சடலம் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. பஸ்ஸின் சாரதி ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



பலியான இளைஞன் இதுரை அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப்படும் நிலையில் ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## மோ. சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இரு ஊர்காவலர் பலி

அம்பாறை, பன்னல்கம பகுதியில் அதிவேகமாக பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இரண்டு சைக்கிள் ஓட்டுநர்கள் உயிரிழந்துள்ளனர்.

சிவில் பாதுகாப்பு படை வீரர்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்

இந்தவிபத்தில் உயிரிழந்த இருவருக்கும் வயது 48 என பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதொச நிவாரணப் பொதிகள் தொடர்பாக அவதூறாகப் பேசியவர்களிடம் நஷ்ட ஈடு

## கோர நடவடிக்கை என்கிறார் பந்துல



புத்தாண்டுக் காலத்தை முன்னிட்டு பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட சதொச நிவாரணப் பொதி தொடர்பாக அவதூறாகப் பேசியவர்களிடம் 50 கோடி ரூபா நஷ்டஈட்டை பெற்றுக் கொள்ள சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நிவாரணம் வழங்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. 12 அத்தியாவசியப் பொருள்களை உள்ளடக்கிய 1,000 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண பொதி அனைத்து சதொச விற்பனை நிலையங்கள் ஊடாகக் கடந்த முதலாம் திகதி தொடக்கம் விற்பனை செய்யப்படுகிறது

நிவாரணப் பொதியை விற்பனை செய்யும் போது ஒரு சிலர் நிவாரணப்பொதி தொடர்பில் போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அது தொடர்பில் கொம்பனித்தெரு பொலிஸில் சதொசவின் தவிசாளர், தேயிலை விநியோகஸ்தர்கள், அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தவிசாளர், சமூக வியாபார இயக்கத்தினர் ஆகியோர் இணைந்து அவர்களது வர்த்த நடவடிக்கைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானம் தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார்கள். நிவாரணப்பொதி தொடர்பில் தவறான கருத்துக்களை வெளியிட்டவர்களை கைதுசெய்து ஊடகங்கள் முன்பாக அவர்களது கருத்துகளை பகிரங்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாம் இதுவரை நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்த தரகு வர்த்தக செயற்பாடுகளை நிறுத்தியுள்ளோம். மிளகு 100 கிராம் 300 ரூபாவுக்கு விற்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் மிளகு செய்கையை ஊக்கபடுத்தி ஒரு பக்கெட் மிளகை 170 ரூபாவுக்கு வழங்கியது என்றார்.

அதேபோல் ஒரு கிலோகிராம் கஜுவை 1,100 ரூபாவாக குறைத்துள்ளது. எனவே, இதுவரை இடம் பெற்று வந்த தரகு கொள்ளை வர்த்தகத்தை நிறுத்துவதற்காக அரசாங்கம் தலையிட்டுள்ளது. – என்றார்.

# மேல் மாகாணத்தில் 925 பேர் கைதாகினர்

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு சோதனையின்போது பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 925 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் உத்தரவுக்கு அமைவாகவே கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குற்றவியல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 40 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 306 பேரும், ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக 518 பேருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவர்.

இந்த நிலையில் கைதான நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போதைத் தடுப்புப் பணியக அதிகாரிகள் உட்பட 20 பேருக்கு விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள்களை மீண்டும் போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் உட்பட 20 பேருக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்தக் குழுவை ஏப்ரல் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு தலைமை நீதிவான் அறிவித்துள்ளார்.

# 30 ரயில் சேவைகள் இன்றும் நாளையும் ரத்து

பண்டிகை காலத்தை முன்னிட்டு அலுவலக ரயில் சேவை , பொது பயணிகள் ரயில் சேவை உள்ளிட்ட 30 ரயில் சேவைகள் இன்று 13 ஆம் திகதியும் நாளை 14 ஆம் திகதியும் ரத்து செய்யப்பட்டுள்ளன. 21 விசேட ரயில் சேவைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் சேவையில் ஈடுபடும் அலுவலக ரயில்கள் இரு நாள்களுக்கு மாத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளன என ரயில்வேத் திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பிரனாந்து தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பொது மக்கள் தலைநகரில் இருந்து தங்களின் சொந்த இடங்களுக்குச் செல்லவும், பண்டிகைக் காலத்தை நிறைவு செய்து மீண்டும் தலைநகருக்கு அல்லது தங்களின் சேவை பிரதேசங்களுக்கு திரும்பவும் 21 விசேட ரயில் சேவைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சேவைகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பொது மக்கள் ரயில் சேவையில் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் உள்ளிட்ட பிரதான ரயில் நிலையங்களில் பயணிகள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது பொறுப்பற்ற வகையில் செயற்படுகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது. சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை ரயில் நிலையங்களுக்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். ரயில் நிலைய பொலிஸ் அதிகாரிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். – என்றார்.

# நாட்டின் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு திறமையற்ற தலைமைத்துவமே காரணம்

## பாலித்த ரங்கே பண்டார குற்றச்சாட்டு

அரசாங்கத்தின் செயற்திறமை மற்றும் முறையான தலைமைத்துவம் இல்லாமையே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வாழ்க்கைச் செலவு அதிகரிக்கக் காரணமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினை மற்றும் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பாகத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடு பாரிய பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருகின்றது. பெற்றுக்கொண்ட கடன் தவணைகளை அடைக்க முடியாதிருக்கின்றது. மக்கள் அன்றாட வாழ்க்கைச்செலவை சமாளிக்க முடியாது கஷ்டப்பட்டு வருகின்றனர். மக்கள் எதிர்கொண்டுள்ள இந்த நிலைமையை போக்க அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டம் இல்லை. அரசாங்கத்திடம் இந்த நிலைக்கு அரசாங்கத்தின் செயற்திறமை இல்லாமை மற்றும் முறையான தலைமைத்தும் இல்லாமல் இருப்பதே காரணமாகும்.



மேலும் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நாங்கள் நாட்டின் கடன் தவணைகளை முறையாக செலுத்திவந்தோம். மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்கினோம். அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை மேற்கொண்டோம். நாட்டின் அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்தோம். கிராம எழுச்சி வேலைத்திட்டம் மூலம் கிராமங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தோம். இதற்கு சிறந்த அரசியல் முகாமைத்துவமே காரணமாகும்.

அத்துடன் அரசியல் அனுபவம் இல்லாமல் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் விளைவே நாட்டின் பொருளாதார வீழ்ச்சி மற்றும் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் போயிருக்கின்றது. டொலரின் பெறுமதி 205 ரூபா வரை உயர்ந்துள்ளது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்கின்றது. அதனால்தான் நாளுக்கு நாள் பொருள்களின் விலை அதிகரித்துச் செல்கின்றது. திறமையற்ற தலைமைத்துவமின்மையே இதற்குக் காரணமாகும்.

2015 இல் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டில் ஆட்சிக்கு வரும்போதும் நாட்டின் பொருளாதார நிலைமை இவ்வாறுதான் இருந்தது. அவ்வாறு இருந்தும் ஆட்சிக்கு வந்து சில தினங்களிலேயே இடைக்கால வரவு செலவுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்து மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தோம். அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்தோம். ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அனுபவம் செயற்திறமை மற்றும் அரசியல் முகாமைத்துவமே இதற்குக் காரணமாகும்.

அத்துடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் மக்களுக்கு வழங்குவதாகத் தெரிவித்ததில் மலையக தோட்டத்தொழிலாளர்களுக்கு 160 ரூபா அதிகரித்து வழங்கி இருக்கின்றது. அதனையும் ஒரு பகுதியினருக்கே வழங்கி இருக்கின்றது. அதனால் 160 ரூபாவைகூட வழங்க முடியாத அரசாங்கமாக இந்த அரசாங்கம் மாறியிருக்கின்றது. – என்றார்.

# போலி ஆவணங்கள் தயாரித்தவர் வாழைச்சேனையில் கைதானார்

மட்டக்களப்பு –வாழைச்சேனையில் போலி ஆவணங்கள் தயாரிப்பு நிலையமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் மடிக்கணனி, பிரதியெடுக்கும் இயந்திரம் மற்றும் போலி ஆவணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவ தினமான ஞாயிறு இரவு விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கணனி பயிற்சி நெறிக்கான ஆவணங்கள் உட்பட பல ஆவணங்கள் தயாரிப்பில் ஈடுபட்டு கொண்டிருந்த 44 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான சட்டம் தனியான நாட்டை உருவாக்க வழியமைக்கும்

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள சட்டத்தின் மூலம் மற்றுமொரு மாநிலம் அல்லது நாடு உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே இந்த விடயத்தை அவர் கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இந்தச் சட்டம் தெளிவாக தனியான நாட்டை உருவாக்கும் வழிமுறை.

குறித்த சட்டத்தின் பிரகாரம், துறைமுக நகரை ஆட்சி செய்வது ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழு.

துறைமுக நகரை உருவாக்கக் கடலை நிரப்ப வேண்டிய தேவை இருக்கவில்லை.

அபிவிருத்திகளை மேற்கொள்ள நாட்டில் காணப்படும் காணிகளைப் பயன்படுத்தி இருக்கலாம் எனவும் துமிந்த நாகமுவ குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# சொன்னவர்கள் செய்தவர்கள் யார்?

ந.லோகதயாளன்

“சொல்வதையே செய்வோம். செய்வதையே சொல்வோம்” – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கடி கூறும் சொல்லாடல் இது.

“சத்தமின்றி சந்நதமின்றி மக்களின் தேவைகளை சாத்தியமாக்குவதே எமது அணுகுமுறை” என்றும் அவர் கூறுவார்.

அப்படியான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சத்தம் போட்டு சொன்ன விடயங்கள் என்னாகின என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வரை பயங்கரவாத தடுப்புப் பிரிவு கைது செய்த நிலையில் நானே ஜனாதிபதியுடன் தலையிட்டு 24 மணி நேரத்திற்குள் வெளியே வர ஏற்பாடு செய்தேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினாலும், அமைச்சர் இதுபோல வேறு பல விடயங்களில் கூறியவை பல காலமாக நிறைவேறாத நிலையில் இது மட்டும் அமைச்சர் குறிப்பிட்டபடி இடம்பெற்றிருக்குமா என சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

அமைச்சர் அப்படி என்னதான் கூறினார், எப்போது கூறினார் எனவும் அவர்கள் பட்டியலிடுகின்றனர்.

கிழக்கு மாகாண தொல்லியல் செயலணியில் 15 சிங்கள இனத்தவர்கள் மட்டுமே நியமிக்கப்பட்ட



நிலையில் தமிழர் நியமிக்கப்படுவார் என இதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே கூறினார். ஆனால் இன்று வரை நியமிக்கப்படவே இல்லை.

டிசெம்பர் 26 இல் பலாலி சர்வதேச விமான நிலையமும் மீண்டும் இயங்கும் என்றார். இதனைக் கூறி 4 மாதம் கடந்தும் விமான நிலையம் இயங்கவேயில்லை.

தீவுகளின் ராஜா நானே என்கின்றார். ஆனால் தீவு ஏலம் விடப்படுவதனை இன்றுவரை தடுக்க முடியவில்லை.

அமைச்சரது மாவட்டத்தின் அதிகாரிகள் தூக்கியெறிந்து பந்தாடப்படும்போது, அதனை ஆட்சேபிக்கும் அமைச்சர் அதனைத் தடுக்க வல்லமையின்றி இருந்தார்.

பல்கலைக் கழகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் தூபி இரவோடு இரவாக நிர்வாகத்தினால் இடித்தபோது ‘இரவில் கட்டப்பட்டது; இரவிலேயே இடிக்கப்பட்டது’ என்றார். கடைசியில் விவகாரம் என்னவாயிற்று?

அவரது சொந்த அமைச்சு விடயத்தில் 10 ஆயிரம் மீனவர்களை அழைத்துச் சென்று மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பேசப்போகின்றேன் என்ற அமைச்சர் 10 ஆயிரம் ரூபாவிற்கு இந்திய மீனவர்களிற்கு மீன்பிடி அனுமதியை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவற்றிற்கும் இன்றுவரை தீர்வு கிட்டவேயில்லை.

2020.03.20 அன்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற காணாமல் போனோர் விடயத்திற்கு ஒரு மாத காலத்திற்குள் தீர்வு என்றார் . அதற்கு தீர்வு கிட்டினால் அதுதான் அமைச்சரின் உண்மையான வல்லமை எனப்படும். ஆனால் இந்த விடயம் இன்று வரை என்னாச்சு? கூறிய காலம் முடிய இன்னும் ஒரு வாரமே உண்டு.

இதேபோல் இரணைதீவு சென்று வருவதற்கான கெடுபிடி நீக்கப்பட்டுள்ளது என 2021.02.05 கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மீன்பிடி

> “2021.03.20 அன்று யாழ் மாவட்டச் செயலகத்தில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காணாமல்போனோர் விடயத்திற்கு ஒரு மாத காலத்திற்குள் தீர்வு என்றார். இந்த விடயம் இன்றுவரை என்னாச்சு? கூறிய காலம் முடிய இன்னும் இருப்பதோ ஒரு வாரம் மட்டுமே.”



அமைச்சர் தெரிவித்தார். இந்த நாட்டு மக்கள் இந்தத் தீவுக்குப் போக இன்றும் கடற்படையின் தனியான அனுமதி கோரப்படுகின்றது.

2021.03.05 அன்று காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம் இடமாற்றப்படாது என்றார். ஆனால் 2021.03.08ஆம் திகதி இரவோடு இரவாக அள்ளிச் செல்லப்பட்டது. பின் பலரின் முயற்சியினா லேயே மீண்டும் 18 ஆம் திகதி யாழ்ப் பாணம் எடுத்து வரப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இயங்கிய ஓர் இணைய வழி ஊடகத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சார்பிலும் டென்மார்க்கில் உள்ள ஒருவரது தொடர்பு அமைச்சரிடம் ஏற்படுத்தப்பட்டு தான் 12 வயதிலேயே டென்மார்க் சென்ற காரணத்தினால் இது விடயத்தில் முழுமையான விவரங்கள் தெரியாது என்றும், கைதானோரை விடுவிக்க உதவு மாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் கிடையாது என மக்கள் தரப்பில் சுட்டப்படுகின்றது.

இதேநேரம் மணிவண்ணன் விடயத்தில், தமது கட்சிக்கு ஏதும் தெரிவிக்காமல் இவ்வாறு மணிவண்ணன் தரப்பு செயல்பட்டமையைக் கண்டித்து சபை அமர்வை சகலரும் புறக்கணிக்கின்றோம் என மாநகர சபையின் ஈ.பி.டி.பி.சார்பில் 8ஆம் திகதி அறிக்கை வெளியிடப்பட்டது. ஆனால் 9 ஆம் திகதி நீதிமன்றில் சபை அனுமதியில் இடம்பெற்ற செயல் என சட்டத்தரணிகளால் வாதிடப்பட்டது. அதே ஈ.பி.டி.பியின் இன்னுமோர் சபை உறுப்பினர் அந்த சட்டத்தரணி அணியில் ஒருவராக நீதிமன்றில் ஆஜராகினார்.

இதேநேரம் இந்த விடயத்தில் ஈ.பி.டி.பியின் பங்கு எவ்வாறு இருந்தது என்பதும் ஆராயத்தக்கது.

ஈ.பி.டி.பியின் தற்போதைய மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் முதல்வருமான யோகேஸ்வரி பற்குணராஜா சபையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பிலும் அதன் பின்பு இடம்பெற்ற நிலைவரம் சார்பாகவும் மணிவண்ணனது அணியில் உள்ள ஒருவர் மூலம் கேட்டறிந்து அதனை உடனடியாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றார் என்றும் –

இது தொடர்பில் உடன் கவனமெடுப்பார் எனவும், முடிந்தால் உடனடியாகவே ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு விடுத்த கோரிக்கைக்கும் முயற்சிக்கப்படும் என பதிலளித்தார் எனவும் கூறப்பட்டது. அதன்பால் அமைச்சரும. முழு மூச்சாக முயன்றார் எனக் கூறப்பட்டது.

இதேநேரம் இந்த விடயத்தில் இப்படியொரு அரசியல் இலாபம் தேடாதீர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கோரியமையோடு, யாழ். நகர முதல்வரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் கலந்துரையாடி விடுதலை செய்ய முடியுமாக இருந்தால் ஏன் அரசியல் கைதிகளை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி விடுதலை செய்ய முடியாது என்றும் கேட்டார்.

உண்மை அதுவானால் ஏன் அரசியல் கைதிகள் விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைதியாக இருக்கின்றார் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் செய்த இந்த வேலைக்கு யாரோ பெயர் வாங்கிக் கொள்ளும் வேலையாகவே இது உள்ளது என்றும் அவர் சொன்னார்.

தலவாக்கலை விவ் ரெஸ்ட் விருந்தகத்தில் 10 ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்தக் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

நகர முதல்வர் மணிவண்ணனின் கைது தவறானது. ஏனெனில் கொழும்பு மாநகர சபைக்கு ஒரு சட்டம், யாழ். மாநகர சபைக்கு இன்னொரு சட்டமா? அப்படியானால் இந்த நாட்டில் இரண்டு சட்டங்களா? ஜனாதிபதியின் ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்ற கோட்பாடு எங்கே? தமிழர்கள் செய்தால் தவறு, ஏனையவர்கள் செய்தால் அது சரியா? இன்று இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து பல வருடங்கள் ஆகின்றது. இலங்கையில் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டனர் என இலங்கை அரசாங்கம் கூறிவருகின்றன. அப்படியானால் ஏன் அரசாங்கம் பொய்யான பிரசாரங்களை செய்து வருகின்றது? என்றெல்லாம் அவர் கேட்டார்.

இதே நேரம் –



தற்போதைய அரசு தமிழ் மக்கள் மீது கரிசனையாகவுள்ளது, ஆனால் இவ்விடயத்தில் ஐ.தே. கட்சியின் வாடைதான் இனவெறியைத் தூண்டியதாக ஈ.பி.டி.பி. பிரமுகர் ஒருவர் வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். அதாவது கூட்டமைப்பு ஆதரவளித்த சஜித் பிரேமதாஸாவின் அணியே இதனை நாடாளுமன்றில் பெரிதாக்கியதாக அவர் கூறினார் ( தமிழர்களை பொறுத்தமட்டில் தெற்கின் ஆட்சியாளர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்).

(11 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரை அரசியல் கேள்விக்கு உட்படுத்தப்படும் என்ற அச்சமே மாகாண சபைத் தேர்தல் தாமதம்!

## அரசைச் சாடுகிறார் சிறிதரன் எம்.பி.



பரம்பரை அரசியல் கேள்விக்கு உட்படுத்தப்படும் என்ற அச்சத்தில் அரசு மாகாண சபை தேர்தலை நடத்த அஞ்சுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மாகாண சபை தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறுவது சம்பந்தமாக எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. எந்த முறையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், எப்போது நடத்தப்பட வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்தால் நாங்கள் அந்த மாகாண சபை தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்.

குறிப்பாக மாகாண சபை என்பது வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்வதற்கான ஓர் ஆரம்ப புள்ளியாகவே கொண்டு வரப்பட்டது. அந்த அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும்.

அது என்ன முறையில் நடத்தப்பட வேண்டும், எப்போது நடத்தப்பட வேண்டும் என்பதற்கு அப்பால், விரைவாகவும் வேகமாகவும் அந்த மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

அந்தத் தேர்தலை நடத்தி உடனடியாக மாகாண சபைகளின் அதிகாரப் பரவலாக்கல், அதன் ஊடான மக்கள் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

19 ஆம் திகதி தீர்மானிக்கின்ற திகதியென்பது பல முறை அவர்களால் சொல்லப்பட்ட செய்திகள். இன்னு மின்னும் அதன் காலம் இழுத்தடிக்கப்படலாம். காலத்தை இழுத்தடிக்கப்படாமல் உடனடியாக முடிவு எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

விரக்தி அடைந்திருக்கின்ற சிங்கள மக்கள் அரசுக்கு எதிராகக் கட்டாயம் வாக்களிப்பார்கள். அந்த வாக்களிப்பு என்பது இந்த அரசை கட்டாயம் ஆட்டம் காணச்செய்யும்.

அடுத்து அவர்களின் அரசியல் பாரம்பரியம் அல்லது பரம்பரை அரசியல் என்பது கேள்விக்கு உட்படுத்தப்படும் என்ற பயத்தின் காரணமாகவே அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தப் பின்னடிக்கின்றது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிவேக நெடுஞ்சாலையில் பொறுப்பற்று பயணிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எச்சரிக்கை



பண்டிகைக் காலங்களில் அதிவேக நெடுஞ்சாலைகளில் பொறுப்பற்ற முறையில் பயணிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பேஸ்புக்கில் பரவிய சில புகைப்படங்களை அடுத்து விதிமுறைகளை மீறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சித்திரை புத்தாண்டு காலத்தில் நெடுஞ்சாலை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அதிவேக நெடுஞ்சாலைகளில் கடுமையான நடவடிக்கை அமுல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினார்.

# 2 ஆவது டோஸ் கொவிஷீல்ட் தடுப்பூசி; பாவனை பற்றி விசேட கலந்துரையாடல்



கொரோனா பரவலை கட்டுப்படுத்த நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட அஸ்ட்ராசெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் தொடர்பாக நேற்று (திங்கட்கிழமை) விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இரண்டாவது டோஸ் தடுப்பூசிகளைப் பொதுமக்களுக்கு செலுத்த அரசாங்கத் திடம் சுமார் 2 லட்சத்து 30 ஆயிரம் தடுப்பூசிகள் உள்ளன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், நேற்று நடைபெற்ற நிபுணர் குழுவின் கலந்துரையாடலின் பின்னர் இந்த விடயம் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்பட்டது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இரண்டாவது டோஸ் தடுப்பூசி முதல் ஊசி போட்ட 10 முதல் 12 வாரங்களுக்கு இடையில் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் 10 வாரங்களில் இரண்டாவது டோஸ் கொடுக்க முடிவு செய்திருந்தபோதும் தற்போது மேலதிகமாக 2 லட்சத்து 30 ஆயிரம் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன என்றும் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.



# இராணுவத்தளபதி யாழ். விஜயம்!

யாழ்ப்பாணம், ஏப். 13

சுற்றுப்பயணம் மேற்கொண்டு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அதன்படி யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு மற்றும் கொரோனா நிலைமை தொடர்பாக இராணுவத் தளபதி ஆய்வு செய்வார் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவ வீரர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் உதவிகோரி கோட்டா டெல்லி பயணம்



கொழும்பு, ஏப். 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த மாத இறுதியில் டெல்லிக்கு வர திட்டமிட்டுள்ளார் எனவும் இவ்வாறு வரும் அவர் பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அல்குவைதா, அபுசய்யப் இயக்கங்களை சேர்ந்த பயங்கரவாதிகள் சமீப காலமாக இலங்கையைத் தங்கள் தளமாக பயன்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

அரபு நாடுகள் கிழக்கு, தெற்கு ஆபிரிக்க நாடுகள் ஆகியவற்றில் செயற்படும் இந்த பயங்கரவாதிகள் இலங்கையில் நடமாடுவது அதிகரித்துள்ளது.

மேலும் சர்வதேச போதை மருந்து கும்பலும் இலங்கையை போதைப்பொருள்கள் கடத்தும் மையமாக வைத்து இருக்க முயற்சிக்கிறார்கள்.

இதை முறியடிக்க இலங்கையில் போதிய படை பலம், புலனாய்வு அமைப்புகள் இல்லை. இதற்கு இந்தியா போன்ற பெரிய நாடுகளுடைய உதவி இருந்தால்தான் முடியும். அதிலும் பக்கத்து நாடான இந்தியாவால்தான் இதற்கு உதவ முடியும்.

எனவே, இதற்கான ஒத்துழைப்பை வழங்கும்படி இந்தியாவிடம் கேட்டுக் கொள்வதற்காக கோட்டாபய ராஜபக்ஷ இந்தியா வர உள்ளார். சமீபத்தில் கூட கேரள மாநிலம் அருகே சென்ற மர்ம படகை இந்திய கடலோர காவல்படை இடை மறித்தது. அப்போது அந்த படகில் 3 ஆயிரம் கோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின் போதைப்பொருள்கள் இருந்தன.

இந்தப் படகு இலங்கையை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது. இதுபோன்றவற்றைத் தடுக்க வேண்டுமென்றால் இந்தியாவுடைய உதவி இலங்கைக்குத் தேவைப்படுகிறது. எனவே, பயங்கரவாதிகளும், போதை மருந்து கும்பலும் இலங்கையைத் தளமாக மாற்றிவிடாமல் தடுக்க இலங்கை அரசு பயங்கரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க டொலரின் விலை ஊச்சத்தைத் தொட்டுள்ளது

மத்திய வங்கி நேற்று (திங்கட்கிழமை) வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 203.73 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலரின் விற்பனை விலை, கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி 203.59 ரூபாவாகப் பதிவாகியிருந்தது.

ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் விற்பனை விலை வரலாற்றில் முதன் முறையாக 200 ரூபாவை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டு காலத்தில் மின்வெட்டு இல்லை!

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக, நாளாந்த மின்சார தேவை அதிகரித்துள்ளது என மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இருப்பினும் சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் மின்வெட்டை அமுல்படுத்தப்போவதில்லை என அமைச்சின் ஊடக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த சில நாள்களில் தொழிற்சாலைகள் மற்றும் பிற ஆலைகளின் செயற்பாடுகள் குறையும் என்பதால், நாளாந்த மின் தேவை குறையும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

20 வீதம் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மூலமாகவும், கிட்டத்தட்ட 40 வீதம் லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் மூலமாகவும் மின்சாரம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது என அமைச்சின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# அரசின் பயங்கரவாதத் தடைச்சட்டம் அம்பிகா சற்குணநாதன் நடவடிக்கை



ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான புதிய விதிமுறைகளுக்கு எதிராக இலங்கை உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

ஸ்ரீலங்காவின் அரசமைப்பின் 10, 12, 13 மற்றும் 14 ஆம் சரத்துகளில் உள்ள உரிமைகளைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய விதிமுறைகள் மீறும் வகையில் அமைந்துள்ளன என அம்பிகா சற்குணநாதன் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய விதிமுறைகளில் நாட்டு பிரஜைகளின் பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகியவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த விதிமுறைகள் பரந்த அளவில் காணப்படுவதால் அதனை நடைமுறைப்படுத்தும் போது சட்டவரையறையை மீறக்கூடிய சாத்தியம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேற்பார்வைக்கான பொறிமுறை காணப்படவில்லையெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அதிகார வரையறையை மீறும் வகையில் இந்த புதிய விதிமுறைகளில் உள்ளடக்கப்பட்ட அதிகாரங்கள் காணப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இன, மத அடிப்படையில் எதிர்மறையான கருத்துக்களைத் தோற்றுவிக்கக் கூடியதாகவும் இன, மத குழுக்களுக்கு எதிர்மறையான தாக்கத்தை செலுத்துமெனவும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

மேலும் விதிமுறைகள் ஒரு நபரின் சட்டரீதியான அணுகலையும் அவருக்கு எதிரான ஆதாரங்களை ஆராய்வதையும் சரியான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதையும் தடுக்கலாம் எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதித்துறையின் ஆய்வு இல்லாமல் 12 மாதங்கள் தடுப்புக்காவலை மேலும் 12 மாதங்களுக்கு நீடிக்க புதிய சட்டத்திருத்தம் அனுமதிப்பதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.



கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி தேவஸ்தனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவத் திருவிழா நேற்றையதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 15நாள்கள் திருவிழா இடம்பெறவுள்ளதுடன், எதிர்வரும் 24ஆம் திகதி சப்பரதத் திருவிழாவும் 25ஆம் திகதி இரதோற்சவமும், 26ஆம் திகதி தீர்தோற்சவமும் இடம்பெறுவதுடன் 26ஆம் திகதி மாலை கொடியிறக்கத்துடன் வருடாந்த மகோற்சவம் நிறைவடையவுள்ளது.



## முன்னெப்போதும் இல்லாத வகையில் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு!

### எதிரணி எம்.பி. விசனம்

கொழும்பு,ஏப்.13

நாட்டின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பொருடகளின் விலைகள் உயர்ந்துள்ளன. நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் குறித்து அமைச்சர்களுக்கு புரியவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. சி. அலவதுவாலா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் குருநாகலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒரு கிலோ பச்சைப் பயறு இப்போது 1,200 ரூபாவாக உயர்ந்துள்ளது. 100 கிராம் மஞ்சள் தூள் 750 ரூபா. ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் - இது நல்லதா கெட்டதா என்று கூட எனக்குத் தெரியாது - இது 800 ரூபா. ஒரு தேங்காயின் விலை சுமார் 100 ரூபா. ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 100 முதல் ரூ.110 வரை. ஒரு




கிலோ சர்க்கரை 125 ரூபா ஆகும். இந்த சூழ்நிலையில் புத்தாண்டு அட்டவணைக்கு மக்கள் எவ்வாறு பச்சைப் பயறுத் தின்பண்டம் தயாரிக்க முடியும்? இதற்கு எவ்வளவு செலவாகும்?

எனவே, இதுபோன்ற நிலைமை வரலாற்றில் ஒருபோதும் ஏற்படவில்லை. இந்த நிலைமையிலேயே ஒரு குடும்பம் இரண்டு வாரங்களில் மூன்று கிலோ அரிசி சாப்பிடலாம் என்று கூறப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.




# நன்றி நவிலல் ...

எனது அன்புக் கணவர் அமரர் திரு.வே.சிவஞானசோதி அவர்களை இழந்த தருணத்தில் எங்கள் குடும்பத்திற்கு நீங்கள் அளித்த அனுதாபங்கள், அன்பு மற்றும் ஆதரவுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள் மற்றும் இரங்கல் செய்தி அனுப்பியவர்களுக்கும் நினைவுரைகள் ஆற்றியவர்களுக்கும் இரங்கல் கூட்டங்களை நடாத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் நன்றி செலுத்த முடியாமைக்கு வருந்துகின்றோம்.

**மனைவி**
**சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர்**


## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு தமிழ்க் கூட்டமைப்பும் பொறுப்பாம்

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.13

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. என்பன பொறுப்புக் கூற வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை மறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கும் குற்றச்சாட்டு பாரதூரமானதெனவும் அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக நல்லாட்சி அரசாங்கமே ஆட்சியில் இருந்தது. அந்தக் காலப்பகுதியில் அவர்களுக்கு பிரதான சூத்திரதாரியைக் கண்டறிய முடியாமல் போனது.

இந்த நிலையில், நாட்டினதும், நாட்டு மக்களினதும் பாதுகாப்பை கருத்திற் கொண்டு, செயற்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.



எனினும், நல்லாட்சி அரசாங்கம் அதனை மேற்கொள்ளவில்லை. நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பியும் இந்த குற்றச்சாட்டுக்களிலிருந்து விலகிக் கொள்ள முடியாது எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரச அனுமதியூடாக குற்றவாளிகள் தப்புகின்றனர்

## அனுர குமார சீற்றம்



அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் தீர்மானங்களையும், பரிந்துரைகளையும் செயற்படுத்த அரசாங்கம் அனுமதி கோருவதன் ஊடாக, குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பது மாத்திரமன்றி, குற்றச்சாட்டுகளை விசாரணை செய்த அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கான வாய்ப்புகளும் ஏற்பட்டுள்ளன என அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அநுரகுமார திசாநாயக்க –

கடந்த தேர்தலில் நம் நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை வழங்கினார். அந்த நேரத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு வலுவான அரசாங்கம் தேவை என்ற அடிப்படையில் ஒரு வலுவான அதிகாரம் கோரப்பட்டது.

ஆனால் இந்த மூன்றில் இரண்டைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் என்ன நிறைவேற்றப்பட்டது? 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் மூலம், ஜனாதிபதி நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்களைத் தனக்குக் கீழ் கொண்டுவந்தார். இரட்டை பிரஜாவுரிமையைக் கொண்ட பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றததுக்குத் தேர்ந்தெடுப்பதற்கான தடை நீக்கப்பட்டது.

மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவில்லை, ஆனால் அது ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்திற்கு நெருக்கமானவர்களின் பிரச்சினைகளை தீர்த்தது. மேலும், 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசியல் பழிவாங்கல் குறித்த ஆணைக்குழுவின் தீர்மானத்தையும், பரிந்துரைகளையும் செயற்படுத்த அரசு நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை முன்வைத்தது.

இது 21ஆம் திகதிக்கான நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் நட்பு நாடுகளுடன் தொடர்புடைய 70 இற்கும் மேற்பட்ட வழக்குகளை நீக்க ஜனாதிபதி நாடாளுமன்ற பரிந்துரைகளுக்கு அனுப்பியுள்ளார். பிரதமர் இவற்றை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி சார்பில் முன்வைத்துள்ளார். ஊழல், திருட்டு மற்றும் குற்றம் தொடர்பான வழக்குகளைக் கைவிட இது முன்மொழிகிறது.

இதற்காகவா மக்கள்; அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு அதிகாரத்தைக் கொடுத்தார்கள் என நாங்கள் மக்களிடம் கேட்கிறோம். இந்த வழக்குகளை நீக்க நாடாளுமன்றத்தில் கைகளை உயர்த்தப் பலர் தயாராக உள்ளனர். இதற்கிடையில், உதயங்க வீரதுங்க மீதான வழக்குகள், அவன்கார்ட் வழக்குகள், சிறுவர் கடத்தல் மற்றும் கொலை தொடர்பான வழக்குகள், லசந்த விக்ரமதுங்க கொலை மற்றும் கீத் நோயர் மீதான தாக்குதல் ஆகியவற்றின் குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பது மட்டுமல்லாமல், குற்றச்சாட்டுகளை விசாரணை செய்த அதிகாரிகள், வழக்குகளைத் தாக்கல் செய்த சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், வழக்குகளை விசாரணை செய்த நீதிபதிகள் மற்றும் முறைப்பாட்டாளர்களுக்கு எதிராக இவர்கள் மீண்டும் வழக்குத் தாக்கல் செய்கின்றமை தொடர்பாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்காகவா வாக்களித்தீர்கள் என மக்களை கேட்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# புற்றுநோயை ஏற்படுத்தும் தேங்காய் எண்ணெய் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப்.13

புற்றுநோயை ஏற்படுத்தும் என பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெயை மீண்டும் திருப்பி அனுப்பும் நடவடிக்கை நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமாகியது.

பார்பரா' என்ற கப்பல் மூலம் 105 மெட்ரிக் தொன் மசகு தேங்காய் எண்ணெய் அடங்கிய ஆறு கொள்கலன்களை மீண்டும் மலேசியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்று சுங்க செய்தித் தொடர்பாளர் (சட்ட விவகாரங்கள்) துணைப் பணிப்பாளர் சுதத் சில்வா தெரிவித்தார்.

நேற்று காலை 6.30 மணிக்கு கொழும்பு துறைமுகத்தில் உள்ள முனையத்துக்;கு வந்த 'பார்பரா' கப்பலில் இந்த தேங்காய் எண்ணெயை மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டது என்று சுங்க செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பார்பரா நேற்று மாலை 5 மணியளவில் புறப்பட்டது. புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய அஃப்லாடொக்சின் அடங்கிய தேங்காய் எண்ணெயிருப்பதாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டின்கீழ் கடந்த 30 ஆம் திகதி தன்கொட்டுவ காவல்துறையினரால் இரண்டு பவுஸர்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து இலங்கை தர நிர்ணய நிறுவனம் மேற்கொண்ட ஆரம்ப சோதனைகளில் இறக்குமதி செய்யப்பட்ட இந்த மசகு தேங்காய் எண்ணெயில் அஃப்லாடொக்சின் இருப்பது தெரியவந்தது.

இந்த நிலையிலேயே குறித்த மசகு எண்ணெய் திருப்பியனுப்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 2, 500 சீனப் பிரஜைகளுக்கு சினோபோர்ம் ஏற்றப்பட்டுள்ளது

இலங்கையில் இதுவரையில் 2 ஆயிரத்து 500 சீனப் பிரஜைகளுக்கு சினோபோர்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மருந்துப் பொருள்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் கட்டுப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நல்லெண்ண அடிப்படையில் இலங்கைக்குச் சீன அரசாங்கம் சுமார் ஆறு லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகளை வழங்கியிருந்தது.

எனினும் இந்தத் தடுப்பூசிகளை இலங்கையர்களுக்கு ஏற்றுவதற்கு இதுவரையில் அனுமதி கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சீன உதவியில் அமைக்கப்படும் கொழும்புத் துறைமுக நகரம் 'பணச்சலவை' மோசடியின் புகலிடமாக மாறக் கூடிய அபாயம்

## அமெரிக்கா எச்சரிக்கை!



கொழும்பு, ஏப்.13

சீனாவின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் கொழும்புத் துறைமுக நகரம் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் 'பணச் சலவை' மோசடியின் புகலிடமாக மாறும் அபாயம் உள்ளது என அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் எச்சரித்துள்ளார்.

துறைமுக நகரத்தின் நெகிழ்வுத் தன்மையான வர்த்தக விதிகளை மோசமான சக்திகள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புத் துறைமுக ஆணைக்குழு வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள வரிச் சலுகைகள், வரி அற்ற சம்பள முறைகள் மற்றும் வெளிநாட்டு நிதியை அனுமதிக்கும் ஒழுங்குகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

துறைமுக நகரம் தொடர்பான சட்டங்கள் அதன் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை மிகக் கவனமாகப் பார்க்க வேண்டும் என்றும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

சட்ட விரோத மற்றும் பண மோசடியில் ஈடுபடுபவர்கள் இந்த வணிகச் சூழலைப் பயன்படுத்தி, மோசமான நடவடிக்கைகளுக்கான புகலிடமாக இதை அமைத்துக்கொள்ளும் அபாயம் இருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி நிலைமைகளைத் தடுக்கும் விதமான சட்ட ஏற்பாடுகள் அவசியம் எனவும் அலெய்னா டெப்லிட்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## களை நாசினிகளிலிருந்து சிறந்த பலாபலன்களை பெற.....

1. வயலில் காணப்படும் களைகளை நன்கு அவதானித்து அதற்குப் பொருத்தமான சிபாரிசு செய்யப்பட்ட களைநாசினியை விசிறவும்.
2. களைநாசினி கொள்கலனில் காணப்படும் லேபளில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆலோசனையைப் பின்பற்றி சரியான அளவில் களைநாசினியை விசிறவும்.
3. இலைகளின் மூலம் களைநாசினிகள் அகத்துறிஞ்சப்படுவதற்கு 6 மணித்தியாலங்கள் செல்லுமாகையால் மழையினால் இவை கழுவிச் செல்லப்படாமல் இருக்க மழை பெய்வதற்கு 6 மணி நேரத்திற்கு முன் விசிற வேண்டும்.
4. சிபாரிசு செய்யப்பட்ட அளவிலேயே களைநாசினியை விசிறுவும். செறிவு குறைவாக களைநாசினியை விசிறும் போது அதன் வினைத்திறன் குறைவடைவதால் சரியான முறையில் களைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும்.
5. களைநாசினியை பயன்படுத்தி 3 நாள்களின் பின்னர் வயலின் நீரை கட்டி வைக்கவும் இல்லாவிடில் களைகள் இறந்த பின்னர் மண்ணில் காணப்படும் களை விதைகள் இரண்டாவது முறையாகவும் முளைக்கும்.
6. களைநாசினியை கலப்பதற்கு சுத்தமான நீரையே பயன்படுத்தவும்.
7. தொடர்ந்தும் ஒரே களைநாசினியை பயன்படுத்தும் போது அவற்றிற்கு களைகள் இசைவாக்கம் அடைவதுடன் எதிர்ப்பினங்களையும் உருவாக்கும். எனவே ஒரே களைநாசினியை பயன்படுத்தாமல் மாற்றி மாற்றி களைநாசினிகளை பயன்படுத்த வேண்டும்.
8. தாங்கியின் அமுக்கத்தை கட்டுப்படுத்தக் கூடிய தெளிகருவியை பயன்படுத்தவும்.
9. அதிகளவு நீர் துளிகளை வெளியேற்றும் பீச்சு முனையைப் பயன்படுத்த வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# வெளிநாட்டுத் தொடர்பைக் கொண்ட சிலரே இராணுவத்துக்கு எதிராக பொய்ப் பிரசாரம்




**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

**இலங்கை இராணுவம் தமிழ் மக்களுக்கு மனிதாபிமான ரீதியிலான பணிகளையே முன்னெடுக்கின்றது. ஆனால், வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொண்டுள்ள சிலரே இராணுவம் தொடர்பில் பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். உண்மையில் இராணுவம் என்ன செய்கின்றது என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள்.**

**- இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

போரின்போது, குடும்பத் தலைவனை இழந்த பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள வீடொன்றை இன்று திறந்துவைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இராணுவமானது ஒரு மனிதாபிமான இராணுவமே ஆகும். இதனை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், வெளிநாட்டில் இருப்பவர்கள் இங்கு குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் இங்குள்ளவர்களுக்குப் பணத்தை அனுப்பி இராணுவத்தினர் தொடர்பாகப் பொய்யான பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போதைய கொரோனா நிலவரம் குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளேன். இதன்படி தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்த் தேவையான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் தமிழ் - சிங்களப் புத்தாண்டு வர இருக்கின்றது. எனவே, தற்போதைய நிலைமையில் பொதுமக்கள் தமது புத்தாண்டை மிகவும் அமைதியான முறையில் கொண்டாடுவது மிகவும் சிறந்தது - என்றார்.

## உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் 80 பேருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் மோசடி விசாரணைகள்

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக உள்ள 80 அரசியல்வாதிகள் மீது இலஞ்ச, ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள் என ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குக் கல்வித் துறை தொடர்பில் அதிகளவு எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் ஆணைக்குழு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## பெண்கள் குளிப்பதை படம் எடுத்த அநாமேதயக் குழு தப்பியோட்டம்

### திருமலை ரொட்டவெவவில் சம்பவம்

திருகோணமலை, ரொட்டவெவ கிராமத்தில் இரவு நேரங்களில் வீடுகளுக்குள் கல்லெறிதல் மற்றும் பெண்கள் குளிப்பதை படம் மற்றும் வீடியோக்கள் எடுத்தல் போன்றவை இடம்பெற்று வருவதாக பொது மக்கள் மத்தியில் அண்மைக் காலமாகப் பரபரப்பாக பேசப்பட்டு வந்தது.

இந்நிலையில், நேற்றிரவு பெண்ணொருவர் தனது வீட்டுக் குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த போது, நால்வர் கொண்ட குழு, அலைபேசியில் வீடியோ எடுப்பதைக் கண்டு, அலறியுள்ளார்.

பெண்ணின் கதறல் சத்தம் கேட்டு ஒன்றுகூடிய அயலவர்கள் அக் குழுவினரைத் துரத்திச் சென்றுள்ளனர்.

எனினும், அவர்கள் தப்பியோடியுள்ளனர். இருந்த போதும், அவர்களது செருப்புகள், பெண்ணின் வீட்டின் வளவுக்குள் கழற்றி வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.



பெண்ணின் உறவினர்கள் மொரவெவ பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியமையை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், தப்பியோடியவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கையாக செருப்புகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பெண் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட நால்வரும் சிறுவர்கள் எனத் தாம் சந்தேகிக்கின்றனர் எனவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

## அரசு மீதான மக்களின் நம்பிக்கை சரிந்தது!

### சுதந்திரக் கட்சி விசனம்

கொழும்பு,ஏப்.12

பாரிய எதிர்பார்ப்புடன் இந்த அரசாங்கத்தை உருவாக்கினோம். ஆனால் இலஞ்சம், ஊழல் இன்று எங்கும் அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் வைத்திருந்த நம்பிக்கை நாளுக்கு நாள் சரிவடைந்துவருகிறது.- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ராஜோபவனாராமய விகாராதிபதியை சந்தித்து ஆசிபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட் சியின் சிரேஷ்ட உப தவிசாளர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டுக்கு இன்று முன்னுதாரணமான தலைவர் தேவை.

அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் வைத்திருந்த நம்பிக்கை நாளுக்கு நாள்



சரிவடைந்து வருகிறது.எங்கு பார்த்தாலும் ஊழல், மோசடி குறித்த குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டு வருகின்றன.

பாரிய எதிர்பார்ப்புடன் அரசாங்கத்தை உருவாக்கினோம். ஆனால் இலஞ்சம், ஊழல் இன்று எங்கும் அதிகரித்துள்ளது. தேங்காய் எண்ணெய் மோசடி, சீனி மோசடி, பீ.சி.ஆர். மோசடி என வரிசை நீண்டு செல்கிறது. இதனால் மக்களின் நம்பிக்கை சரிந்து கொண்டு செல்கிறது. இதனை மீள கட்டியெழுப்ப வேண்டும்.

ஊடகவியலாளர்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படவில்லை என்பது மகிழ்ச்சி. எவரையும் தாக்கவில்லை, கொல்லவில்லை – என அவர் மேலும் தெரிவித்தார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## போலிப் பிரசாரத்தை கட்டுப்படுத்தச் சட்டம்

### இந்த வாரம் அமைச்சரவைக்கு

இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடான போலிப் பிரசாரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டத்தைக் கொண்டு வர அரசு தயாராகி வருகின்றது.

அதற்கமைய நீதி அமைச்சு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு இணைந்து சட்டக் கோவை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்த வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமூகங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்தும் மற்றும் வெறுப்புணர்வுகளைத் தூண்டும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுத்தல், இரு நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கைகள் மற்றும் நட்புறவுச் செயற்பாடுகள் குறித்து பொய்யான பிரசாரங்களைப் பரப்புதல், இனவாத, மதவாத கருத்துக்களைப் பரப்புதல், நிதி விடயங்களில் பொய்யான கருத்துக்களைப் பரப்புதல் உள்ளிட்ட விடயங்களில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கடற்றொழில் விவகாரத்தை சிலர் தவறாகச் சித்திரிக்கின்றார்கள்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டம்



அத்துமீறி எல்லைதாண்டி சட்டவிரோத தொழில் முறைகளைப் பயன்படுத்துகின்ற இந்திய கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாகப் பல்வேறு வழிமுறைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றனவே தவிர தீர்மானங்கள் எவையும் மேற்கொள்ளப் படவில்லை என தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்த யோசனையை சிலர் மிகைப்படுத்தி தவறாகச் சித்திரித்து வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி அரசியல் நிகழ்வொன்றில் இந்த விடயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

கடல் வளத்தையும் எமது கடற்றொழிலாளர்களையும் பாதிக்கும் இந்திய மீனவர்களது எல்லைதாண்டும் அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்த வேண்டும் என்பதே எனது நோக்கமாக உள்ளது.

குறிப்பாக இந்தியா உட்பட பல சர்வதேச நாடுகளினாலும் எமது நாட்டிலும் தடைசெய்யப்பட்ட ஒரு தொழில் முறைமையை இந்தியக் கடற்றொழிலாளர்கள் மேற்கொள்வதை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆனாலும் இந்த விடயத்திற்கு தீர்வு காண வேண்டும் என்பதே தேவையாக உள்ளது. அதனடிப்படையில் சில யோசனைகள் பலதரப்பினராலும் முன்வைக்கப் பட்டுள்ளன. அதில் ஒரு யோசனையே அனுமதிப்பத்திரம் வழங்கும் விடயமும். அது ஒரு முடிவல்ல. இதை சிலர் தவறான பார்வையில் சித்திரிக்கின்றனர். ஆனாலும் இந்த விடயம் தொடர்பில் இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம் எனக்கும் வடக்கு கடற்றொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த புரிந்துணர்வு உண்டு எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தன்னால் எடுக்கவுள்ள முடிவுகள் பாதிக்கப்படுகின்ற கடற்றொழிலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாகவே இருக்கும் என்றும் அவர்களது விருப்புக்கு மாறானதாக அவை இருக்க மாட்டா என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் யுத்த காலகட்டத்தில் கடவுச் சீட்டின்றி இந்தியாவுக்கு சென்ற எமது மக்களை அந்நாட்டு அரசும் தமிழக மக்களும் கௌரவமாக ஏற்றுக்கொண்டனர் என சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போதைய பூகோள அரசியல் ரீதியில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு இரண்டு நாடுகளுக்கும் அவசியமானது.

அதேநேரம் 1987ஆம் ஆண்டு உருவான இலங்கை இந்திய ஒப்பந்தம் காரணமாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையே தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வாக அமையும் என 34 வருடமாக நான் கூறிவருகின்றேன்.

இதை ஏனைய தமிழ்த் தலைமைகள் போட்டுடைத்துவிட்டனர். இன்று ஜெனிவாவில் அதை சுட்டிக்காட்டியதும் அதை அவர்கள் கையிலெடுத்துள்ளனர்.

அதேநேரம் தேசிய நீரோட்டம், நாடாளுமன்ற ஜனநாயகம், தேசிய நல்லிணக்கம் ஊடான பாதையே எமது மக்களின் பிரச்சினைகளுக்கான சிறந்ததொரு தீர்வைத்தரும் எனக்கூறி அதன் வழியில் அனைவரும் பயணிக்க வருமாறு கோரியிருந்தேன்.

ஆனால் எனது அழைப்பை துரோகம் என்று பிரபாகரனது புராணம் பாடியவர்கள் கூறிவந்தார்கள். இன்று ஏற்றுக்கொள்கின்றனர். – என்றும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 95 ஆயிரத்தைக் கடந்தது கொரோனாத் தொற்றாளர்

கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 95 ஆயிரத்து 313 ஆக உயர்ந்துள்ளது

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 144 பேர் குணமடைந்துள்ளனர்.குணமடைந்தவர்னகளின் மொத்த எண்ணிக்கை 91 ஆயிரத்து 775 ஆக அதிகரித்துள்ளது. 2 ஆயிரத்து 940 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களில் 598 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவுடன் 500 மில்லியன் அமெ. டொலர் கடன் ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்து

சீனாவின் அபிவிருத்தி வங்கியுடன் 50 கோடி அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

குறித்த நிதி இந்த வாரம் கிடைக்கப்பெறும் என நிதி அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு இந்த நிதி பங்களிப்பு செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

10 லட்சம் அமெரிக்க டொலர் கடன் தொகையின் ஒரு பகுதியாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏற் கனவே கடந்த ஆண்டு 50 கோடி அமெரிக்க டொலர் கடன் வழங்கப்பட்டதாகவும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

# சொன்னவர்கள்...

(6 ஆம் பக்கம் பார்க்க...)

இதேநேரம் மணிவண்ணன் 24 மணிநேரத்தில் வெளியில் கொண்டு வரப்பட்டாலும், அவர் ஆக, இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்தான்.

ஆனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான 9ஆம் பிரிவில் கைது செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட இருவர் இரு வாரங்களில் வெளியில் கொண்டு வந்த வரலாறும் உண்டு. ஆனால் அது நடந்தது நல்லாட்சிக் காலத்தில். அந்த விடுவிப்பை முன்னின்று செய்தவர் சுமந்திரன்தான்.(சட்டத்தரணிகள் மாற்றம் காரணமாகவும் அந்த இரு வாரகாலதாமதம் ஏற்பட்டதும் கவனிக்கத்தக்கது.)

அது என்ன வழக்குத் தெரியுமா? யாழ்.பல்கலைக்கழக மாணவத் தலைவர்கள் இருவர் பல்கலை மாணவர் அவை அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் பிரசாரப் படங்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட விடயம் தான். அந்த வழக்கிற்கும் காலம் பிந்திக் கடைசி நேரத்தில்தான் சம்பந்தப்பட்ட தரப்பினர் சுமந்திரனை அணுகி அவரைத் தமது சட்டத்தரணியாகக் கோரினர்.

இப்போது மேயர் மணிவண்ணன் விடயத்தில் சஜித் பிரேமதாஸாவின் அணியைச் சேர்ந்தவரே நாடாளுமன்றில் முதலில் உரையாற்றி விடயத்தைக் குழப்பினார் என்ற விவகாரத்தை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உடனடியாகவே எதிர்க் கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸாவின் கவனத்திற்குக் கொண்டு சென்றமையினால், நிலைமையினை அறிந்த சஜித் பிரேமதாஸா கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் மணிவண்ணனின் கைது நடவடிக்கை மக்களை திசை திருப்பும் ஒரு முயற்சி எனச் சாடினார். அதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கூற்றை சஜித் உள்வாங்கியிருக்கின்றார் என்பது புலப் படுகின்றது.

இவ்வாறு மழை விட்டும் தூவானம் குறையாத மாதிரி மணிவண்ணன் கைது மற்றும் விடுவிப்பு விடயத்தின் மர்ம முடிச்சுக்களை பலர் இணைந்து அவிழ்க்க முயல்கின்றனர். எனினும் இந்த விடயத்தில் இன்னும் பல உண்மைகள் வெளிவர வேண்டியுள்ளன. சிலர் வாய் திறக்காத வரை மர்மங்கள் நீடிக்கவே செய்யும்.

# திருநெல்வேலியில் விடுவிக்கப்பட்ட பகுதி தொடர்ந்தும் முடக்கத்தில்

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்ப்பாணம் – திருநெல்வேலியில் கண்காணிப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட சில பகுதிகள் விடுவிக்கப் பட்டபோதிலும் தொடர்ந்து முடக்கத்திலேயே உள்ளன என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

திருநெல்வேலி சந்தை வியாபாரிகள் மற்றும் ஊழியர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டதைத் தொடர்ந்து, கடந்த 28ஆம் திகதி முதல் சந்தை மற்றும் அங்குள்ள வியாபர நிலையங்கள் ஆகியன சுகாதார அதிகாரிகளின் பணிப்புரைக்கு அமைய மூடப் பட்டன.

அதனைத் தொடர்ந்து அங்குள்ள ஊழியர்கள், வியாபாரிகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் தொற்று இல்லையென உறுதியானவர்களின் வியாபார நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை பாரதிபுரம் மற்றும் பாற்பண்ணை பகுதிகளைத் தவிர ஏனைய பிரதேசங்கள் விடுவிக்கப்படும் என வட.மாகாண சுகாதார பணிப்பாளர் மற்றும் யாழ். மாவட்ட செயலாளர் ஆகியோர் அறிவித்திருந்தனர்.

ஆனால் நேற்று மதியம் வரை குறித்த பகுதிகள் விடுவிக்கப்படாமல், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் இருக்கின்றனர்.

மேலும் அத்தியாவசியத் தேவைகளுக்காகச் செல்வோர் மற்றும் வேலைக்குச் செல்வோர் மாத்திரமே பிரதேசத்தில் இருந்து வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார், இராணுவத்தினர் தங்களுக்கு குறித்த பகுதிகளை விடுவிப்பதாக எவ்வித அறிவித்தலும் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# ரயில் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டால் கடும் சட்ட நடவடிக்கை

முன்னறிவித்தலின்றி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடும் ரயில்வேத் தொழிற்சங்கங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில தொழிற்சங்கத்தினரது பின்னணியில் அரசியல் கட்சிகளின் செல்வாக்கு காணப்படுகிறது.

குறுகிய நோக்கத்துக்காகப் பொது மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுளை ரயில்வேத் தொழிற் சங்கத்தினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என போக்குவரத்துத் துறை அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

ரயில் சேவையில் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு உள்ளிட்ட பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வாக்குறுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளனவே தவிர பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

தொழிற்சங்கத்தினரது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் பல்வேறு மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ரயில் சேவையில் காணப்படும் தொழில் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிற்சங்கத்தினர் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தான்தோன்றித்தனமாக செயற்பட்டால் ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக்க நேரிடும்.

ரயில்வே சாரதிகள் சங்கம், ரயில்வே கட்டுப்பாட்டுச் சங்கம் ஆகிய தொழிற்சங்கத்தினர் கடந்த சனிக்கிழமை முன் னெடுத்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir




# கொரோனாத் தொற்றின் மூன்றவது அலை மேயில்!

## தயாராகும்படி எச்சரிக்கை



கொழும்பு,ஏப்ரல்13

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலப்பகுதியில் சுகாதார வழிகாட்டுதல்களை பொதுமக்கள் பெரிதும் புறக்கணித்தால், மே மாதத்தில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலை இலங்கையைத் தாக்கும் என பொது சுகாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொது சுகாதார ஆய்வாளர்கள் (PHI) பல எச்சரிக்கை விடுத்தபோதிலும் கொரோனா வைரஸ் சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றாமல் பெரும்பாலான மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்வதாக அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

திருமதி இலங்கை அழகிராணிப் போட்டி சர்ச்சை, வன அழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினை, உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் அசுத்தமான எண்ணெய் இறக்குமதி உள்ளிட்ட பல பிரச்சினைகி, அதிகரித்து வரும் கொரோனா வைரஸுடன் தொடர்புடைய மிகவும் தீவிரமான சிக்கலை மறைத்துவிட்டன எனப் பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்க செயலாளர் மகேந்திர பாலசூரிய ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக நாடு இயல்பு நிலைக்கு வந்துவிட்டதாக எண்ணிக் கொண்டு, போதிய முன்னெச்சரிக்கைகளை எடுக்காமல் மக்கள் அச்சமின்றி வாழப் பழகிக்கொள்கின்றனர்.

அந்த அச்சத்தை மீண்டும் ஒரு முறை பொதுமக்களிடையே ஏற்படுத்துவது கடினம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அடிப்படை கொரோனா வைரஸ் சுகாதார வழிகாட்டுதல்களைக் கூட பின்பற்றாமல், பொருள் கொள்வனவு செய்யும்போது அல்லது பொதுப் போக்குவரத்து மற்றும் பொது நிகழ்வுகளில் பங்கேற்றல் உள்ளிட்ட தங்கள் இயல்பான செயற்பாடுகள் குறித்து பொது மக்கள் பேசுகிறார்கள், செயற் படுகின்றார்கள் என்றும் பாலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்றும் மூன்றாவது அலை நம்மைத் தாக்கும்போது மட்டுமே இது எவ்வளவு தீவிரமானது என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இப்போது மிகவும் தாமதமாகிவிட்டது என்றும், விளைவுகளை சந்தித்து அதை சமாளிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதன்படி, மே முதல் புதிய கொத்தனிகள் தோன்றுவதை சமாளிக்க அதிகாரிகள் இப்போதே மருத்துவமனைகள் மற்றும் ஏனைய வசதிகளை தயார் செய்ய வேண்டும் என்றும் பாலசூரிய கூறியுள்ளார்.

இதேநேரம், தடுப்பூசி போடப்படுவதால், அவை 100 சதவீதம் பாதுகாப்பானவை என்று மக்கள் தவறாகக் கருதுகிறார்கள் என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஏனைய நாடுகளில் பெரும்பாலானவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்ட போதிலும் மூன்றாவது மற்றும் நான்காவது அலைகள் ஏற்பட்டுள்ளன. இதன் விளைவாக புதிய முடக்க கட்டுப்பாடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.




# மாசி கருவாடு விற்பனை என்று ஹெரோயின் விற்ற வர்த்தகர்

மாசி கருவாடு விற்பனை என்ற போர்வையில் பாரியள வில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த செல்வந்த வர்த்தகர் மற்றும் அவரது ஊழியரை வத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

குறித்த வர்த்தகரின் ஊழியர் பொரளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் குறித்த ஊழியருக்கு எதிராக போதைப்பொருள் விற்பனை சம்பந்தமான பல வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வர்த்தகர் பெரியளவில் மாசி கருவாடு விற்பனை வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறார் எனவும், அதனுடன் தந்தி ரமான முறையில் ஹெரோயின் போதைப்பொருள் விற்ப னையிலும் ஈடுபட்டு வந்துள்ளார் எனவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org